
# தென்னையில் வேர்வாடல் நோய் நிர்வாக முறைகள்



# தென்னை வேர் வாடல் நோய்
# (=கேரளா வேர் வாடல் நோய்)



பைட்டோபிளாஸ்மா



# தென்னை வேர் வாடல் அறிகுறிகள்



இலைகள் உள்நோக்கி வளைந்து மனிதனின் விலா எலும்பு போல காணப்படுதல் **(Flaccidity)**

# தென்னை வேர் வாடல் நோய்



இலைகள் மஞ்சள் நிறமாதல்
(Yellowing)



இலையின் ஓரங்கள் கருகுதல்
(Marginal Necrosis)

# தென்னை வேர் வாடல் நோய்



இலை அழுகல்

**(Leaf rot)**





குருத்து அழுகல்

**(Rotting of spindle)**

# தென்னை வேர் வாடல் நோய்



பூங்கொத்து கருகுதல்
(Necrosis of inflorescence)



வேர் அழுகல்
(Rotting of roots)

# வேர் வாடல் நோய் பரப்பும் பூச்சிகள்

கண்ணாடி இறக்கை பூச்சி



*ஸ்டெபானிடிஸ் டிபிகா*

தத்துப்பூச்சி



*புரோடிஸ்டா மோயஸ்டா*

# ஒருங்கிணைந்த வேர் வாடல் நோய் மேலாண்மை முறைகள்

# ஒருங்கிணைந்த தென்னை வேர் வாடல் நோய் மேலாண்மை முறைகள்



- நோய் தீவிரமாக பாதிக்கப்பட்ட மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்



- முறையான வடிகால் வசதி செய்யவேண்டும்.



- பசுந்தாள் உரங்களான தட்டைப்பயறு, சணப்பை, கலப்பகோணியம் மற்றும் தக்கைப்பூண்டு ஆகியவற்றை வளர்த்து பூக்கும் முன்னரே மடக்கி உழுது விட வேண்டும்.

# தென்னையில் உர மேலாண்மை

## ஒரு மரத்திற்கு ஒரு வருடத்திற்கு

- மக்கிய சாண உரம் : 50 கிலோ
- வேப்பம் புண்ணாக்கு : 5 கிலோ
- யூரியா : 1.3 கிலோ
- சூப்பர் பாஸ்பேட் : 2.0 கிலோ
- மூரியேட் ஆப் பொட்டாஷ் : 3.5 கிலோ

சமமாக பிரித்து ஆறு மாத இடைவெளியில் இடவேண்டும்

# TNAU தென்னை டானிக்










பென்சில் தடிமன் உள்ள இளம் வேரில் 40 மிலி தென்னை டானிக்
+ 160 மிலி நீர் கலந்து  வருடத்திற்கு 2-3 முறை செலுத்தவும்

# நுண்ணுயிரிகளை மண்ணில் இடுதல்

## ஒரு மரத்திற்கு



- *டிரைகோடெர்மா அஸ்பரெல்லம்* : 100 கிராம்
- *பேசில்லஸ் சப்டிலிஸ்* : 100 கிராம்
- அசோஸ்பைரில்லம் : 100 கிராம்
- பாஸ்போபாக்டீரியா : 100 கிராம்
- வேர் உட்பூசணம் (VAM) : 50 கிராம்




மேற்காணும் நுண்ணுயிரிகளை 5 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து வருடத்திற்கு இரண்டு முறை மண்ணை கிளறி வேர்ப்பகுதியில் இடவேண்டும்









## ஒருங்கிணைந்த தென்னை வேர் வாடல் நோய் மேலாண்மை முறைகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கோகோகான்- 2 லிட்டர் (பெருக்கம் செய்யப்பட்ட கலவை) + 8 லிட்டர் தண்ணீருடன் கலந்து வேர்ப்பகுதி நன்கு நனையுமாறு 2-3 மாத இடைவெளியில் ஊற்றவும்.

5 லிட்டர் 'கோகோகான்' (ஏக்கருக்கு)



# ‘கோகோகான்’ நுண்ணுயிரி பெருக்கம் செய்தல்

150 லிட்டர் நீர்

+

10 கிலோ நாட்டுச் சர்க்கரை

+

5 லிட்டர் தயிர்

+



சமையல் உப்பு 500 கிராம்

+

நன்கு கலக்க வேண்டும்.

+

5 லிட்டர் ‘கோகோகான்’ தாய்க்கலவை

+

நன்கு கலக்கவேண்டும்

இக்கலவையை சாக்குப்பையினால் மூடி நிழற்பாங்கான இடத்தில் 5-7 நாட்கள் வளர்க்கவேண்டும்.

தினமும் 3-4 முறை சுத்தமான மூங்கில் கம்பினால் நன்கு கலக்கிவிடவேண்டும்.

# 'கோகோகான்' நுண்ணுயிரி பெருக்கம் செய்தல்









5 லிட்டர்
'கோகோகான்'
(ஏக்கருக்கு)
















நன்கு கலக்கவும்




150 லிட்டர் நீர் + 10 கிலோ நாட்டுச் சர்க்கரை + 5 லிட்டர் தயிர்
+ சமையல் உப்பு 500 கிராம் + 5 லிட்டர் 'கோகோகான்'

# தென்னை மரத்திற்கு 'கோகோகான்' ஊற்றுதல்

ஒரு வாரம் பெருக்கம் செய்யப்பட்ட கோகோகான்- 2 லிட்டர் + 8 லிட்டர் நீர் கலந்து, வேர்ப்பகுதி நன்கு நனையுமாறு, நோயின் தீவிரம் பொறுத்து 2 (அ) 3 மாத இடைவெளியில் ஊற்றவேண்டும்.









# இலை அழுகல் மேலாண்மை

இலை அழுகலைக் கட்டுப்படுத்த ஒரு மரத்திற்கு ஹெக்சாகோனசோல் என்ற பூசணக்கொல்லி 2 மி.லி. + 300 மி.லி. நீர் கலந்து குருத்துப் பகுதியில் 45 நாட்கள் இடைவெளியில் ஊற்ற வேண்டும்.

